www.tamilarangam.net

# சிந்தனை

தை – மாசி
Jan-Feb.
1987






A. விஜிதரன்



SINTHANAI

1/87

அன்பளிப்பு 3.50 D.M.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சிந்தனை

தமிழ் மக்களின் இருள் சூழ்ந்த, நிச்சயமற்ற நிகழ் காலத்தில் தெளிவான சிந்தனை ஊடாக முறையான அரசியல் கோட்பாடுகளை ஆராய்ந்து தீவிரமான பாதையில் செல்வதே நமது குறிக்கோளாகும். மேலும் உங்கள் கருத்துக்களையும், கட்டுரைகளையும் சிந்தனை வரவேற்கிறது.

சுதந்திரமான கருத்துப் பரிமாறல்கள் மூலமே சிந்தனை உருவாகிறது.

கடிதங்கள், கட்டுரைகள் மற்றும் சகல விடயங்களுக்கும் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி.

ஆசிரியர் குழு,
சிந்தனை
ஒல்கா ஸ்ராஸா, 49
7 ஸ்ருட்காட் 1,
மேற்கு ஜேர்மனி.

Editors,
SINTHANAI
Olga str 49,
7-Stuttgart 1.
West Germany.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சிந்தனை



## ஆசிரியர் கருத்து

தை பிறந்தால் வழி பிறக்கும் என்பது தமிழ் மக்கள் பாரம்பரியமாகக் கூறிக்கொள்ளும் வாசகம். ஆனால் தமிழ்த் தலைமைகளினால் கடந்த காலங்களில் செய்யப்பட்ட தைப்பொங்கல் பிரகடனங்கள் தமிழ் மக்களுக்கு நிரந்தரமான விடுதலையையோ அல்லது விடிவையோ கொண்டு வரவில்லை என்பதுதான் நிதர்சனமான உண்மையாகும்.

ஒடுக்கப்பட்ட மக்களைச் சுரண்டி வாழும், ஆளும் வர்க்கங்களின் நலன்களைப் பாதுகாப்பதற்காக சிங்களப் பொதுமக்களுக்கு பேரினவாத நஞ்சை ஊட்டித் திசைதிருப்பிவிட்டும் அப்பாவி தமிழ் மக்கள் மீது அரச பயங்கரவாதத்தை கட்டவிழ்த்து விட்டும் தனது ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கும் சிறிலங்கா அரசை முழுமையாகத் தோற்கடிக்காமல் தமிழ் மக்கள் தமது விடிவைக் காண முடியும் என்று நம்புவது வெறும் பிரமையாகும்.

தமிழ்மக்களின் உரிமைகளை மீட்டு எடுக்க தமிழ் மக்களினால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைமைகளின் செயல்திட்டங்கள் செயலற்றுப் போன பின்பு தமிழீழ விடுதலையை வென்றெடுக்கும் நோக்கத்துடன் விடுதலை இயக்கங்கள் உருவெடுத்தன.

சட்டரீதியான உரிமைகளைப் படிப்படியாக இழந்த தமிழ் மக்கள், காலத்திற்கு காலம் பேரினவாதிகளால் கட்டவிழ்த்து விடப்பட்ட இனஒழிப்பு நடவடிக்கைகளின் விளைவாக தமது பாரம்பரியப் பிரதேசங்கள் தவிர்ந்த வேறு எந்தப் பிரதேசங்களிலும் நிம்மதியாக வாழ முடியாது என்ற நிலைமைக்குத் தள்ளப்பட்டனர். இந்தப் பாரம்பரிய தமிழ் பிரதேசங்களில் ராணுவத்தைக் குவித்து அரச பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விடுவதன் மூலம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிறிலங்கா அரசு தனது இனஒழிப்பு நடவடிக்கைகளை மேலும் தொடர்ந்தது. அதிகரித்து வந்த இந்த அரசபயங்கரவாதங்களின் விளைவாக, காட்டிக் கொடுப்பவர்களை அழிக்கும் நடவடிக்கைகளாக ஆரம்பித்த ஆயுதப் போராட்டம் அரசபடைகளுக்கெதிரான தற்காப்புப் போராட்டமாக பரிணாமவளர்ச்சியடைந்தது.

தமிழ்ப்பிரதேசங்களில் அரசபடைகளின் வெறியாட்டங்கள் நடைபெறுவதை கட்டுப்படுத்தி, அவர்களை முகாம்களில் முடங்கியிருக்கச் செய்யும் முயற்சிகளில் இயக்கங்கள் ஓரளவு வெற்றியும் கண்டன. இந்த நிலமையில்தான் தரையில் நடமாட முடியாத அரசு படைகள் ஆகாயவிமானம் மூலம் குண்டுகளை வீசி அப்பாவி மக்களைக் கொல்ல ஆரம்பித்தன.........

இந்தவிதமான ஒடுக்கு முறைகளை கடைப்பிடித்துக் கொண்டிருக்கும் சிறி லங்கா அரசு மறுபுறத்தில் பேச்சுவார்த்தை என்ற ஒரு நாடகத்தையும் நடத்திக் கொண்டிருக்கின்றது. இவை இரகசியப் பேச்சுவார்த்தைகள், வட்டமேசை மாநாடு, திம்புப் பேச்சுவார்த்தை, அரசியல் கட்சிகள் மாநாடு என்ற ரூபங்களில் நடைபெற்றன.

திம்பு பேச்சு வார்த்தையில் கலந்து கொண்ட தமிழ்ப் பிரதிநிதிகள், "ஈழத் தமிழர்களைத் தனித்த தேசிய இனமாக அங்கிகரித்து அவர்களது பிரதேச வாழ் தகைமையை உறுதி செய்ய வேண்டும், தமிழ் பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கிகரிக்க வேண்டும். இலங்கைத் தீவைச் சொந்தமெனக் கருதும் அனைவரினதும் குடியுரிமை உட்பட ஜனநாயக உரிமைகள் அனைத்தும் கிடைக்கச் செய்ய வேண்டும். சிறி லங்கா அரசு ஈழத் தமிழர்களின் இந்த நியாயமான கோரிக்கைகளை அங்கிகரித்து புதிய யோசனைகளை முன்வைக்காதவரை அர்த்தமுள்ள ஒரு நிரந்தரத் தீர்வு என்பது காணமுடியாது" என தமது நிலைப்பாட்டைத் தெளிவாக எடுத்துக் காட்டினர்.

சிறி லங்கா அரசு இந்தக் கோரிக்கைகளை நிராகரித்தது மட்டுமல்லாமல், சிறி லங்காவின் ஒற்றையாட்சி யாப்பின் அடிப்படையிலேயே எந்தவொரு மாற்றத் திட்டத்தையும் விவாதிக்க வேண்டும் என்றும் கூறிவருகின்றது. இதன் பின்பு சிறிலங்கா அரசு முன்வைத்த எந்தத் தீர்வும் தமிழர் பிரதிநிதிகளைப் பூரணமாகத் திருப்திப்படுத்துவதாக இல்லை.

எந்தவொரு ஒப்பந்தமோ அல்லது தீர்வோ ஏற்படும் பட்சத்தில் அவற்றை இந்த அரசாங்கம் நடைமுறைப்படுத்துமா என்ற சந்தேகமும் தமிழ் மக்களின் மனதில் ஆழமாகப்பதிந்துள்ளது. கடந்த கால முதலாளித்துவ அரசாங்கங்கள் தமிழ் முதலாளித்துவத் தலைமைகளுடன் செய்துகொண்ட ஒப்பந்தங்களை கிழித்தெறிந்த கசப்பான அனுபவங்களே இதற்குக் காரணமாகும். மேலும் ராணுவ ரீதியாகத் தன்னைப்பலப்படுத்திக் கொண்டும் ஜனநாயக விரோதச் சட்டங்களை அமுல் நடத்துவதன் மூலம் சாதாரண சிங்கள விவசாய, தொழிலாள மக்களை ஒடுக்கிக் கொண்டிருக்கும் சிறி லங்கா அரசாங்கம், தமிழ் மக்களுக்கு அடிப்படை உரிமைகளை வழங்கக்கூடிய ஒப்பந்தங்களை நடைமுறைப்படுத்துமா என்ற சந்தேகம் எழுவது நியாயமானதேயாகும். இந்தச் சூழ்நிலைகளிலேயே இந்தியத் தலையீட்டுடன் ஒப்பந்தங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்ற கருத்து நிலவி வருகின்றது. இந்தியாவின் இந்தத் தலையீடு அதன் உள்நாட்டு, வெளிநாட்டு அரசியல் தேவைகளுக்கு அமையவே இருக்கும் என்பதில் யாருக்கும் சந்தேகம் இருக்க முடியாது.

ஈழத் தமிழர்களின் பிரச்சனைக்கான தீர்வை வெறும் பூகோளப்பட வரைதல் மூலமாகவோ, காகிதப் பிரகடனங்கள் மூலமாகவோ அல்லது சுத்த ராணுவ நடவடிக்கைகள் மூலமாகவோ காணமுடியாது. அரசியல் இல்லாத ஆயுதப் போராட்டம் இன்று அராஜகமாக உருவெடுத்திருக்கின்றது.

இன்றுள்ள யதார்த்தமான நிலைமைகள் முழுவதையும் அடிப்படையாகக் கொண்டு உருவாகும் அரசியல் அணுகுமுறைகள் மூலமே தமிழ் மக்கள் தம் விடிவைக்காண முடியும் என்பது எமது கருத்தாகும்.

25.01.1987.



www.tamilarangam.net



# பேச்சு வார்த்தைகள்



திம்புவில் 1985இல் இலங்கை அரசிற்கும், தமிழர் பிரதிநிதிகளுக்கும் இடையில் நடந்த பேசசுவார்த்தை முறிவடைந்ததன் பின்னர் இந்திய அரசின் நல்லெண்ணத் தலையீட்டினால் பேசசுவார்தைகள் எந்தத் திசையில் நடந்து கொண்டிருக்கின்றது என்பதனை விளக்குவதே இக் கட்டுரையின் நேக்கமாகும்.

தமிற் மக்கள் ஒரு புறம்பான ஒரு தேசிய இனம் என்பதனையும் அத்தேசிய இனத்திற்கு சுயநிர்ணய உரிமை உண்டென்பதையும், அவர்களுக்கென்று ஒரு பாரம்பரியப் பிரதேசம் ஒன்று உண்டு என்பதையும், மலையக மக்களின் பிரஜாவுரிமை வழங்கலுமான, தமிழர் பிரதிநிதிகளின் நாலு அடிப்படைக் கோரிக்கைகளில் இணக்கம் ஏற்படாமல் விட்டதனைத் தொடர்ந்து திம்பு பேசசு வார்த்தை முறிவடைந்தது.

இதன்பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் தமது நிலை பற்றி இந்திய அரசிற்கு டிசம்பர் 85இல் சமர்ப்பித்த மகஜரில் கீழ்க் கண்டவாறு குறிப்பிட்டிருந்தனர்.

இலங்கையானது மாநில அரசுகள் இணைந்த ஒன்றியமாக இருக்கவேண்டும். பெரும்பான்மையான தமிற்ப் பேசும் மக்கள் வாழும் வடக்கு கிழக்கு மாகாணங்கள் இணைந்து தமிற்மொழிவாரியான மாநில அரசாக அமைய வேண்டும். அமைக்கப்பட்ட மாநிலத்தின் பிரதேசம் அம்மாநிலத்தின் அனுமதியின்றி மாற்றப்படக்கூடாது.

ஒன்றியத்தின் பாராளுமன்றத்திடமே சட்டமியற்றும் அதிகாரம் இருக்க வேண்டும். பாதுகாப்பு, வெளிவிவகாரம், பணம், தபால், தந்தி, குடிவரவும் வெளியேற்றமும், வெளிநாட்டு வர்த்தகம், புகையிரதம், விமான சேவை, ஒலி-ஒளி பரப்பு, சுங்கம், தேர்தல், குடிமதிப்பு ஆகியவை பற்றிய சட்டங்களையே மேற்படி பாராளுமன்றம்

www.tamilarangam.net

இயற்ற அதிகாரம் கொண்டிருக்கும். எந்த ஒரு தேசிய இனத்தை யாவது பாதிக்கக்கூடிய சட்டங்கள் அந்தத் தேசிய இனத்தின் பெரும்பான்மையான பாராளுமன்ற அங்கத்தவர்களின் அனுமதியின்றி இயற்றப்படலாகாது.

1981 நவம்பர் 1முதலாம் திகதியில் இலங்கையில் வாழ்ந்த (வெளிநாட்டுப் பிரஜைகள் அல்லாத) சகலருக்கும் பிராஜா உரிமை வழங்கப்படவேண்டும். தமிழ் மொழி அரச கரும மொழியாக்கப்பட வேண்டும். இவைக்கான அரசியலமைப்புத்திருத்தங்கள் செய்யப்பட வேண்டும்.

மாநில அரசின் ஆளுனர் (கவர்னர்), முதல் அமைச்சரின் ஆலோசனையுடன் ஜனாதிபதியினால் நியமிக்கப்படவேண்டும். மாநில சட்டசபைக்கான தேர்தலில் அதிகப்படியாக வெற்றியடைந்த அரசியல் கட்சியின் தலைவரை ஆளுனர் முதலமைச்சராக நியமிக்க வேண்டும். பொலிஸ், உள்நாட்டுச் சட்டமும் ஒழுங்கும், காணியும் அதன் பாவிப்பும், பல்கலைக்கழக, தொழில் நுட்ப கல்வி உட்பட சகல கல்விகளும், அகழ்வாராட்சி, கலாச்சாரம், தொழில், மீன் பிடித்தல், உள்ளூராட்சி, கலால் தீர்வை, விவசாயம், நீர்பாசனம், கமத்தொழில் சேவைகள், சுகாதாரம், சிறை மற்றும் சீர்திருத்த நிலையங்கள், அரச போக்குவரத்தும் தெருக்களும் கட்டுறவு அபிவிருத்தி ஆகியவை பற்றிய சட்டங்களை இயற்ற மாநில சட்சபை அதிகாரம் பெற்றிருக்கவேண்டும். இந்த விடயங்கள் தொடர்பான நிறைவேற்று அதிகாரங்கள் முதலமைச்சரிடமும் மந்திரி சபையிடமும் இருக்க வேண்டும்.

மலையக மக்கள் பெரும்பான்மையாக வாழும் பெருந் தோட்டபபகுதிகளை புதிய கிராமசேவைப்பகுதிகளாக அமைத்து அவற்றை உதவி அரசாங்க அதிபர்கள் பகுதிகளாக இணைத்து அவற்றை ஒரு நிர்வாக அல்லது தேர்தல் மாவட்டங்களாக அமைப்பதன் மூலம் அவர்களின் பாதுகாப்புக்கும் அரசியல் பங்களிப்புக்கும் வழிசெய்யப்பட வேண்டும்.

ஈழத்தேசிய விடுதலை முன்னனி.
-----------------

இதே காலகட்டத்தில் (நவ. 85) ஈழத் தேசிய விடுதலை முன்னணி இந்திய அரசிற்கு எழுதிய கடிதத்திலே இடைக்கால தீர்வு பற்றிய தமது கருத்துக்களை பின்வருமாறு தெரிவித்திருந்தனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net



இடைக்காலத் தீர்வு ஒன்று ஏற்பட்டால் அதன் மூலம் இலங்கை அரசியலில் ஜனநாயக ரீதியாகக் கலந்து கொண்டு எமது போராட்டத்தை முன்னை விட சிறப்பாக முன்னெடுக்க முடியும் என்ற கருத்து சில வட்டங்களில் நிலவுகின்றது. இதனை நாம் பின் வரும் காரணங்களினால் ஏற்றுக் கொள்ள முடியாதுள்ளது.

1. இலங்கை அரசே ராணுவத் தீர்வு மேலானது என்ற நிலையை மேற்கொண்டுள்ளது. இதன் காரணமாகவே நாமும் ஆயுதப்போ போராட்டத்திற்கு நிர்பந்திக்கப் பட்டோம்.
2. நாம் இலங்கை அரசியலில் கலந்து கொள்வதாக இருந்தாலும் கூட இன்று ஜனநாயகம் முழுமையாக வரண்டு விட்ட இலங்கையில் அது சாத்தியமில்லை.
3. தற்போதுள்ள அரசியல் அமைப்பானது 1972 அரசியல் அமைப்பை விட கடினமானதும் ஜனநாயகமற்ற ஜனாதிபதி முறைக்கும் சென்றுள்ளது. அரசியல் அமைப்பு ரீதியாக தேசிய இனப் பிரச்சனையை நோக்கும் போது சுயாட்சி அல்லது சமஷ்டி ஆட்சிக்கு ஏற்ற வகையில் அரசியல் அமைப்பு அமையவில்லை.

www.tamilarangam.net



அரசியல் கட்சிகள் மாநாடு.

25.06.1986 இல் கொழும்பில் கூட்டப்பட்ட அரசியல் கட்சிகள் மாநாட்டில் தமிழர் பிரதிநிதிகளாக தமிழர் விடுதலைக் கூட்டணியினர் மட்டுமே பங்குபற்றினர். இந்த மாநாட்டில் ஜனாதிபதி ஜயவர்த்தன முன்மொழிந்த பிரேரணைகள் வருமாறு:-
சிறி லங்கா அரசாங்கத்தின் இந்த முன்மொழிவுகள் பின்வரும் கோட்பாடுகளை உள்ளடக்கிய கட்டமைப்புக்குள்ளேயே ஆராயப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தது.

1. சிறிலங்காவின் ஐக்கியமும் கௌரவமும் இறைமையும் பாதுகாக்கப்பட வேண்டும்.
2. சிறிலங்கா அரசியல் அமைப்பிலுள்ள ஒற்றை ஆட்சி முறை பேணப்பட வேண்டும்.
3. அரசியலமைப்புத் திருத்தங்களுக்கமைய உருவாக்கப்படும் மாகாணசபைகளுக்கு அதிகாரங்கள் பரவலாக்கப்படும்.

ஒவ்வொரு மாகாணத்திற்கும் ஒரு மாகாணசபை உருவாக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டிருந்த அதே வேளையில் திருகோணமலைத் துறைமுகம் அதைச்சார்ந்த பிரதேசம் ஆகியவற்றின் நிர்வாகம் மற்றும் அபிவிருத்தி ஆகியவற்றிற்குப் பொறுப்பாக அதிகாரசபை ஒன்று நிறுவப்படும் எனக் குறிப்பிடப்பட்டது.

www.tamilarangam.net



## மாகாண சபைகள்.

மாகாணசபைகள், அவற்றிற்குப் பரவலாக்கப் படும் அதிகாரங்கள் சம்பந்தமான அரசியல் சட்ட திருத்தங்கள் பாராளுமன்றத்தில் 2/3 பெரும்பான்மை வாக்குகளுடன் நிறைவேற்றப் படும். மாகாணசபைகளுக்கு சட்டமியற்றும் அதிகாரங்களை அளிக்கும் மசோதா பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படும். இந்த அதிகாரங்கள், மாகாணசபைகளின் ஆலோசனையுடன் பாராளுமன்றத்தில் 2/3 பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்படும் தீர்மானத்திலேயே மாற்றப்பட முடியும். மேற் கூறிய அரசியலமைப்புத் திருத்தத்திற்கு சர்வஜனவாக்கெடுப்பு அவசியமற்றதாகவே இருக்கும்.

## அதிகாரப் பரவலாக்கல்.

மாகாணசபைகளுக்குப் பரவலாக்கப்படவிருக்கும் அதிகாரங்கள் வருமாறு:-

1. உள்நாட்டுச் சட்டமும் ஒழுங்கும்.

தேசிய பாதுகாப்பு, தேசிய பந்தோபஸ்து, சமூகஅதிகாரங்களை நிலைநாட்ட அரசபடைகளைப்பாவித்தல் ஆகியவைதவிர்ந்த மாகாணப்பொது ஒழுங்குக்கு அவசியமான அதிகாரங்கள் மாகாண சபையிடம் இருக்கும்.

சிறிலங்கா பொலிஸ் படையானது தேசியபகுதி, மாகாணப் பகுதி எனப்பிரிக்கப்பட்டிருக்கும். மாகாணப்பகுதியின் அதிகாரங்கள் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது

2. குடியேற்றம்.

மாகாணத்திலுள்ள காணிகள், காணிஅபிவிருத்தி ஆகிய சம்பந்தமான அதிகாரங்கள் மாகாணசபையிடம் இருக்கும். கீழ்க் கண்ட விடயங்கள் இதற்கு விதிவிலக்காக இருக்கும்.

அ. சிறிலங்கா அரசிற்கு தேவையான காணிகள் மீதான அதிகாரங்கள் சிறிலங்கா அரசிடமே இருக்கும். இந்தக் காணிகளில் மாகாணசபைகளினால் ஏற்படுத்தப்படும் திட்டங்களுக்கான

www.tamilarangam.net

குடியேற்றங்கள் மாகாணசபைகளின் ஆலோசனையுடன் ஜனாதிபதியினால் செய்யப்படும்.

ஆ. மாகாணங்களுக்கிடையிலான நீர்ப்பாசனமும் காணிஅபிவிருத்தித் திட்டங்களும்.

உதாரணமாக மகாவலித்திட்டம் போன்ற பாரிய திட்டங்கள் மத்திய அரசாங்கத்தின் பொறுப்பிலேயே இருக்கும். இத்திட்டங்களுக்கான குடியேற்ற விதிமுறைகளை மத்திய அரசாங்கமே தீர்மானிக்கும். குடியேறுபவர்களைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பு மாகாணசபைகளிடம் இருக்கும்.

3. விவசாயமும் தொழிலும்.

அ. தேசிய விவசாயத்திட்டமிடல், அமுலாக்கல் ஆகியவை மத்தி அரசின் பொறுப்பில் இருக்கும். விலை நிர்ணயம், மானியம், காப்புறுதி முதலியன இதில் உள்ளடங்கும்.

மாகாண அளவிலான திட்டங்கள், அமுலாக்கல், சந்தைப்படுத்தல், சிறிய நீர்பாசன வேலைகள் முதலியன மாகாணசபைகளின் பொறுப்பில் இருக்கும்.

ஆ. தேசிய அளவிலான தொழில் சம்பந்தமான திட்டமிடல் அமுலாக்கல் ஆகியவை மத்திய அரசாங்கத்தின் பொறுப்பில் இருக்கும். மாகாணங்களில் தொழில்களை உருவாக்கி வளர்க்கும் பொறுப்பு மாகாணசபைகளிடம் இருக்கும். மத்திய அரசானது சமவளர்ச்சி, திட்டமிட்ட அபிவிருத்தி, மூலவளங்களை முறையாகப் பாவித்தல் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு தொழில்களைப் பதிவு செய்தல், தரவுகளைப் பெறுதல் கூலி மற்றும் விலைகளை நிர்ணயித்தல், சூழல். தரப்படுத்தல் முதலிய அதிகாரங்களைப் பெற்றிருக்கும். கடன்பெற்று ஆரம்பிக்கும் தொழில்கள் அமைச்சின் பரிசீலனைக்கு உட்படுத்தப்படும்.

4. கல்வியும் கலாச்சாரமும்.

நடுத்தரக் கல்வி சம்பந்தமான பெரும்பான்மையான அதிகாரங்கள் மாகாணசபையிடம் இருக்கும். தனியார் பல்கலைக்கழகங்களை அமைக்கும் உரிமையும் அவைகளுக்குண்டு. மேலும் பரவலாக்கப்பட வேண்டிய அதிகாரங்கள் பற்றிக் கலந்துரையாடப்பட வேண்டும்.

கலாசாரம் சம்பந்தமான பெரும்பான்மையான விடயங்கள் மாகாணசபையிடம் இருக்கும். மத்திய அரசிடமிருந்து பெறப்படும் நிதிகள் சம்பந்தமாகவே அதன் கட்டுப்பாடு இருக்கும்.

www.tamilarangam.net

மேற்குறிப்பிட்ட விடயங்கள் தவிர்ந்த மற்றைய விடயங்கள் பற்றி பின்பு முடிவு செய்யப்படும்.

மத்திய அரசாங்கத்திற்கு ஒதுக்கப்பட்ட விடயங்கள்.

1. சகல விடயங்கள் சம்பந்தமான தேசிய கொள்கையை நிர்ணயித்தல்.
2. பாதுகாப்பு.
3. உள்நாட்டு பந்தோபஸ்து.
4. குற்றயியல் சம்பந்தமான சட்டமும் ஒழுங்கும். இதில் ஒரு பகுதி மாகாண சபைகளுக்கு பரவலாக்கப்படும்.
5. வெளி விவகாரம்.
6. தபால் மற்றும் தொலைத்தொடர்பு.
7. நீதிபதிகள் நீதிமன்றங்கள் தொடர்பான நீதிவிவகாரங்கள்.
8. தேசிய வருமானம், நிதிக்கொள்கை, வெளிநாட்டு மூலவளங்கள்
9. வெளிநாட்டு வியாபாரம்.
10. துறைமுகங்களும் இறங்குதுறைகளும்.
11. விமானசேவையும் விமானத்தளங்களும்.
12. தேசியப் போக்குவரத்து.
13. ஆறுகளும் கால்வாய்களும்.
14. சுரங்கங்களும் கனிப்பொருட்களும்.
15. ஒலிபரப்பு.
16. ஒளிபரப்பு.
17. குடிவரவு, வெளியேற்றம், பிரஜாஉரிமை.
18. சுங்கவரி.
19. தேர்தல் சம்பந்தமான விடயங்கள்.
20. கப்பல் போக்குவரத்து.
21. நீர்ப்பிரதேசங்களும் பொருளாதார வலையங்களும்.
22. குடிமதிப்பும் புள்ளிவிபரங்களும்.
23. விசேட தொழில்களும் பயிற்சியும்.
24. குறிப்பிட்டு ஒதுக்கப்படாத சகல விடயங்களும்.
25. மாகாணங்களுக்கிடையிலான வர்த்தகம்
26. அரசகாணிகள். இதில் ஒரு பகுதி மாகாணசபைகளுக்கு ஒதுக்கப்படும்.
27. தேசிய சரித்திரசம்பந்தமான பத்திரங்களைப் பாதுகாத்தல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மாகாணசபைகளின் சட்டமாக்கும் அதிகாரம்.

மாகாணசபைக்கென ஒதுக்கப்பட்ட விடயங்களில் மாகாண எல்லைக் குள் செயற்படுத்தக்கூடிய சட்டங்களை இயற்ற மாகாணசபைகளுக்கு அதிகாரமுண்டு.

நிறைவேற்று அதிகாரம்.

ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட மாகாண ஆளுனர் மாகாண சபை அங்கத்தவர்களின் நம்பிக்கையைப்பெற்ற ஒருவரை முதல் அமைச்சராக நியமிப்பார். முதலமைச்சரின் ஆலோசனையுடன் ஆளுன -ர் மந்திரி சபை அங்கத்தவர்களை நியமிப்பார்.
மாகாணசபைகளின் தீர்மானங்களை நிறைவேற்றும் அதிகாரம் ஆளு னரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும். மாகாண சபை அங்கத்தவர்கள் பாராளுமன்ற அங்கத்தவர்களாக இருக்கவேண்டிய அவசியமில்லை.

நிதி சம்பந்தப்பட்ட அதிகாரங்கள்.

மாகாணசபை வரிகள் விதிப்பதன் மூலமும் கடன்கள் பெறு வதன் மூலமும் நிதியைத்திரட்டும் அதிகாரமுடையது. ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட பிரதிநிதித்துவமுடைய நிதி ஆணைக்குழு மாகாணங்க ளுக்கான நிதி ஒதுக்கீடுகளைச் செய்யும். தேசிய கொள்கைக்கு அமைய, வெளிநாட்டுக்கடன்களுக்கு மத்திய அரசாங்கத்தின் அனுமதி பெறவேண்டும்.

தேர்தலும் பதவிக்காலமும்.

மாகாணசபைகளுக்கான தேர்தல் விகிதாசார பிரதிநிதித் -துவ அடிப்படையில் நடைபெறும். சனத்தொகை, பரப்பளவு ஆகிய வற்றின் அடிப்படையில் மாகாணசபை அங்கத்தவர்களின் தொகை நிர்ணயிக்கப்படும். மாகாணசபையின் பதவிக் காலமும் பாராளுமன்ற த்தின் பதவிக்காலமும் ஒன்றாக இருக்கும்.

அரசியலமைப்புச்சட்டம் அல்லது மற்றைய சட்டங்களுக்கமை -ய செயற்படத்தவறும் மாகாணசபைகள் மீது நடவடிக்கைகள் எடுக்கவும் அவற்றைக்கலைக்கவும் ஜனாதிபதி அதிகாரம் பெற்றிருப் -பார். ஆறு மாதங்களுக்கு மட்டுமே அமுலில் இருக்கக்கூடிய இந்த உத்தரவுகள் இரண்டு மாதங்களுக்குள் பாராளுமன்றத்தின் அங்கீகா ரத்தைப் பெறவேண்டும்.

www.tamilarangam.net

அமிர்தலிங்கத்தின் கருத்து.

கேள்வி — முதலாவது சுற்றுப் பேச்சுவார்த்தைகள் எவ்வாறு நடைபெற்றன ?

பதில் — ஆரம்ப நிலையிலுள்ள பேச்சுவார்த்தைகள் பயனுள்ளவையாகவே இருந்தன. பல முக்கியமான விடயங்கள் பற்றிப் பேசினோம், ஆனால் சில சிக்கலான பிரச்சனைகளுக்கு தீர்வு காணவேண்டியுள்ளது.

கேள்வி — இந்த முக்கியமான பிரச்சனைகள் எவை ?

பதில் — முதலாவதாக அதிகாரம் பரவலாக்கப்படும் பகுதி பற்றியது.

கேள்வி — உங்களுடைய நிலைப்பாடு என்ன ?

பதில் — முழு தமிழ்ப்பிரதேசமும் ஒரு தனிப்பிரிவாக இருக்க வேண்டும் என்பது எமது நிலைபபாடு.

கேள்வி — மொழிவாரியான தமிழ்ப்பிரதேசத்தையா குறிப்பிடுகிறீர்கள் ?

பதில் —நீங்கள் எப்படி வேண்டுமானாலும் குறிப்பிடலாம். வடக்கிலும் கிழக்கிலும் வாழும் தமிழ்ப்பேசும் மக்கள் ஒன்றாக இணைக்கப்பட வேண்டும்.

கேள்வி — அது தமிழ்ப்பேசும் முஸ்லிம்களையும் உள்ளடக்குமா ?

பதில் — 1977இல் எமது தேர்த்தல் விஞ்ஞாபனத்தில் எமது நிலைப்பாட்டைத் தெளிவாகக் கூறியுள்ளோம். மட்டக்களப்பிற்குத் தெற்கால் வாழும் முஸ்லிம்களுக்கு அவர்களது வருங்காலத்தை முடிவு செய்யும் முழு உரிமையும் உண்டு.

கேள்வி — வேறு என்ன முக்கிய விடயங்கள் பற்றிப்பேசினீர்கள் ?

பதில் — அதிகாரப்பரவலாக்கலின் தன்மை, அளவு ஆகியவை பற்றியும் பேசினோம்.

வடக்கும் கிழக்கும் இணைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையில் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் விட்டுக் கொடுக்காமையினாலும்; 04.09.1986 வரை அரசு தமிழர் விடுதலைக் கூட்டணியினரிடம் நிர்வாகப் பரவலாக்கல் பற்றிய விரிவான அறிக்கையை கையளிக்கத் தவறியதாலும் இப்பேச்சு வார்த்தைகளில் எந்த வித முன்னேற்றமும் ஏற்படவில்லை.

www.tamilarangam.net

கிழக்கு மாகாணத்தைப் பிரிக்கும் யோசனைகள்.

இந்திய அரசின் இடைவிடாத முயற்சிகளை தொடர்ந்து கிழக்கு மாகாணத்தை மூன்றுகப் பிரிக்கும் யோசனையை சிறிலங்கா அரசாங்கம் முன் வைத்தது. கிழக்கு மாகாணம் திரிகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை என்ற மூன்று மாகாணங்களாகப் பிரிக்கப் பட்டு திரிகோணமலை சிங்கள மாகாணமாகவும், அம்பாறை முஸ்லிம் மாகாணமாகவும், மட்டக்களப்பு தமிழ்மாகாணமாகவும் அமைய வேண்டும் என்பதே அரசாங்கத்தின் யோசனையாகும். இந்த யோசனைக்குத் தமிழர் பிரதிநிதிகள் ஆட்சேபனை தெரிவித்ததைத் தொடர்ந்து இந்திய அரசு வடக்கு கிழக்கு தொடர்பு ஏற்படுத்தும் "இணைப்புப் பிரதேச" (கொறிடோர்) யோசனை -யை சமர்ப்பித்தது. ஆனல் இந்த யோசனை சிறிலங்கா அரசினுல் நிராகரிக்கப்பட்டது.

கிழக்கு மாகாணத்தைப் பிரிக்கும் யோசனையை கே. டபிள்யு. தேவநாயகம் உட்பட சகல கிழக்கு மாகாண பாராளுமன்ற அங்கத்தவர்களும் நிராகரித்து விட்டமையாலும் சிறிலங்கா அரசு வேறு புதிய யோசனைகளை கொழும்பு சென்ற இந்தியத் தூதுக் குழுவிடம் தெரிவித்துள்ளது. பெரும்பான்மையாக சிங்கள மக்கள் வாழும் பகுதிகளை அம்பாறை மாவட்டத்தில் இருந்து பிரித்து தமிழ் பேசும் மக்கள் பெரும்பான்மையாக வாழும் கிழக்கு மாகாணத்தை உருவாக்குவதே இந்த யோசனையாகும். 1981 குடிசன மதிப்பின் படி கிழக்கு மாகாணத்தில 42% தமிழர்களும், 32% முஸ்லிம்களும் 25% சிங்களவரும் வாழ்ந்தனர். அம்பாறை மாவட்டத்தின் சிங்களப்பகுதிகள் அகற்றப்பட்டால் புதிய மாகாணத்தில் 48% தமிழர்களும் 37% முஸ்லிம்களும் 14% சிங்களவர்களும் இருப்பார்கள் என கூறப்படுகின்றது.

எந்தவகையிலும் திரிகோணமலைத்துறைமுகம் சிறிலங்கா அரசின் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும் என்பதே அரசின் கொள்கையாக இருக்கின்றது. இந்திய மத்திய அரசின் கட்டுப்பாட்டில் பம்பாய், கல்கத்தா, மதராஸ் துறைமுகங்கள் இருப்பது போல திருகோணமலையும் இருக்க வேண்டும எனக் கூறப்படுகின்றது.

இதுவரை நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் பரிமாறப்பட் -பட்ட கருத்துக்களை வெளிக்கொண்டு வருவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். இவற்றிற்கான அரசியல் காரணிகளை பிறிதொரு சமயம் ஆராய்வோம். ■



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## சுதந்திர நாட்டின் பிரஜைகள்

நேற்றும் தலையுயர்த்தி
நடந்த தெருக்கள் தான்
இப்போது நெஞ்சிடிக்க
எவனெவனோ
கைகொண்டு கழுத்தை நெரிக்கும் கனவுகள்
நேற்றல்ல, இன்றல்ல
நாளைக்கென் வீட்டில்
அதிரும் என்றுயுத்தபறை
செவிக்குள் அதிர்கிறது.

மலங்க விழித்தபடி
இருண்ட கண்களினால்
எதுவோ தேடும்
நாங்களும், எங்கள் பொழுதும்.

இளவாலை விஜயேந்திரன்

**சிந்தனை**யில் வெளியாகும் கையெழுத்துடன் கூடிய ஆக்கங்களின் கருத்துக்கள் அவற்றை ஆக்கியோரின் சுதந்திரமான கருத்துக்களே.

ஆசிரியர் குழு.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# விஜிதரன்

# எங்கே?



விஜிதரன்.........
யாழ்-பல்கலைக்கழகத்தின் 3வது வருட வர்த்தகப்பிரிவு மாணவன். பல்கலைக்கழக மாணவ சங்கங்கள் அரசாங்கத்தினால் தடைசெய்யப் பட்ட பின்பு பல்கலைக்கழக மாணவர் குழு உருவாகியது. அதில் ஒரு உறுப்பினர் விஜிதரன்.
கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு இவரது பிறப்பிடம்.
யாழ் குடாநாட்டில் இதுவரை நடைபெற்று வந்த வெகுஜனப் போராட்டங்களில் பல்கலைக்கழக மாணவர்குழுவின் பங்கு குறிப் -பிடத்தக்கதாகவே இருந்துவந்துள்ளது. இக் குழுவின் அங்கத்தவர் விஜிதரனை 4 11.1986 இல் இருந்து காணவில்லை.
விஜிதரன் எங்கே?.........
யாழ்க்குடா நாட்டில் பொலிஸ் மற்றும் சிவில் நிர்வாகங்கள் சீர்குலைந்துள்ள நிலைமையில் பல்கலைகழக மாணவர்களும் பொது மக்களும் "விஜிதரன் எங்கே ?" என்ற கேள்வியை யாழ்குடாநாடு முழுவதும் தமது 'கட்டுப்பாட்டில்' உள்ளது என்று கூறுகின்ற இயக்கங் -களிடம் கேட்டனர். 'தளத்திலுள்ள தலைமைகளிடம்' இருந்து கிடை -த்த பதில், "விஜிதரனை நாம் கடத்தவில்லை" என்பதேயாகும்.

விஜிதரன் எங்கே?.........
மாணவர்களின் ஊர்வலங்களும் மக்கள் அணிகளும் இதற்கு விடைகாண மக்கள் போராட்டங்களை ஆரம்பித்தனர். இவர்கள் மீது "இனம்

www.tamilarangam.net

தெரியாதவர்களினால்"பலாத்காரம் கட்டவிழ்த்து விடப்பட்டது.
19.11.1986 முதல் யாழ் பல்கலைக்கழக மாணவர்களினால் உண்ணாவிரதம் ஆரம்பிக்கப்பட்டது. ஐந்து பல்கலைக்கழகமாணவர்களு-ம் ஒரு பொதுமகனும் இந்த உண்ணாவிரதத்தில் கலந்து கொண்ட-னர். பொதுமக்களின் பேராதரவுடன் அது ஒரு மக்கள் போராட்டமாக மலர்ந்தது. யாழ் நகர் என்றுமே கண்டிராத மாபெரும் மக்கள் ஊர்வலம் நீதி கேட்டு வீதிவலம் வந்தது. மக்களை தற்காலிக மாயையில் மயக்கி அப்பாக்கித் துரைத்தனத்தால் "பிரபால்யம்" அடைந்து விட்ட தலைவர்கள் விஜிதரனைத் தேடித்தருவதாக வாக்களித்தார்கள்.
28.11.1986 இல் உண்ணாவிரதம் கைவிடப்பட்டது. ஆனால் விஜிதரன் எங்கே?........

விஜிதரன் கொலை செய்யப்பட்டிருக்கலாமென நம்பப்படுகின்றது.
அப்படியானால் யார் அந்தக் கொலைகாரர்கள்?
ஈழத்தில் இன்றுள்ள யதார்த்த சூழ்நிலையில் மக்கள் இவர்களை இனம் காணுவார்களா? மிருக வேசம் போட்டுக் கோரக் கூத்தாடி ஒரு விடுதலை இயக்கத் தலைவர் உட்பட நூற்றுக்கணக்கான போராளிகளை படுகொலைசெய்துவிட்டு இரத்தம் காயாத நிலையில் ஈழமக்களின் ஜனநாயக உரிமைகளின் கதவுகளைத் தட்டி 'மிருக்குடன்' கோரப்பற்களைக்காட்டும் அராஜகம் ஈழமக்களின் ஜனநாயக உரிமைகளின் மீது தனது கால்களைப் பதிய வைக்கப்போவதற்கான முன்னறிவிப்பே இதுவாகும்.
புரட்சியின் முன்னறிவிப்பான மக்கள் போராட்டங்களின் உந்து சக்தியான மாணவசக்திக்கு சாவுமணியடிக்க முனையும் இவ்வறிவிப்பு வருங்காலங்களில் மக்கள் எழுச்சி மதிப்பற்றுப் போகுமோ என்ற அச்-சத்தை ஏற்படுத்தியுள்ளது.
வடக்கில் இந்த நிகழ்ச்சிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கும் பொழுது கொழும்பில் பல்கலைக்கழக மாணவரும் சுதந்திரமாணவசங்க தலைவருமான தயா பத்திரண கோரமாகக் கொலை செய்யப்ப-ட்டுள்ளார் என்ற செய்தி எதிர்ப்புரட்சி சக்திகளின் கவனம் இன்று மாணவர்களை நோக்கித் திரும்பியுள்ளது என்பதைக்காட்டுகின்றது.
மக்கள் போராட்டத்தை தொடக்கி வைக்கும் உந்து சக்தியே மாணவசக்தி என்று கூறினார் லெனின். அந்த உந்து சக்தியை அழித்துவிட முனைகிறது இன்றைய அராஜகம். இந்த நிலமையிலும் உலகின் 'மூத்தகுடி' உறங்கிக்கொண்டிருந்தால் வருங்காலம் கேள்விக்குறி-யாகவே அமைந்துவிடக்கூடும்.
......... ......????????

—காளிதாஸ்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

යුක්තිය සාමය නාමෙන්

நீதியின் பெயரால்
சமாதானததின் பெயரால்

For Justice And Peace

# புல்சரா வியனகேயை விடுதலை செய்.

இனங்களுக்கிடையில் நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கம் அரசியல் கைதிகளை விடுவிக்கக் கோரும் அமைப்பு, சமாதானத்திற்கான பெண்கள் அமைப்பு ஆகிய வெகுஜன அமைப்புக்களின் அங்கத்தவரும் களனிப் பல்கலைக்கழக உதவி விரிவுரையாளருமான செல்வி புல்சரா வியனகே, 1.11.1986 சனிக்கிழமை காலை பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் இரகசியப் பொலிசாரினால் கைது செய்யப்பட்டார். முதலில் தேசியப் புலனாய்வு அலுவலகத்திற்கு கூட்டிச் செல்லப்பட்ட செல்வி வியனகே பின்பு நான்காவது மாடிக்கு அழைத்துச் செல்லப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டார் எனவும் தெரிய வருகின்றது.

தேசிய இனப் பிரச்சனை சுமுகமாகத் தீர்க்கப்படவேண்டுமென சமாதானத்திற்கான பெண்களின் அமைப்பின் வீதி ஊர்வலங்களில் பங்கு கொண்டும், அரசியல் கைதிகள் விடுதலை செய்யபபட வேண்டுமெனவும் ஜனநாயக ரீதியாக இயங்கி வந்த செல்வி புல்சரா வியனகே விடுதலை செய்யப்படவேண்டுமென பல்வேறு பெண்கள் அமைப்புக்களும், தொழிற் சங்கங்களும், இந்தியப் பல்கலைக் கழக பேராசிரியர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி.

இனங்களுக்கிடையில் நீதிக்கும்
சமத்துவத்துக்குமான இயக்கம்
Movement for Inter Racial
Justice and Equality
6. Aloe Avenue, Colombo 3 — Sri Lanka.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

Sektion Berlin (West) der International League for Human Rights, New York,
akkreditiert bei den Vereinten Nationen,
Mitglied der Fédération Internationale des Droits de l'Homme/Paris

Internationale
Liga
für Menschenrechte
im Geiste von Carl von Ossietzky

Int. Liga für Menschenrechte e.V., Mommsenstr. 27, D-1000 Berlin 12

(030) 324 36 88

Burozeiten: Montag und Donnerstag
17.00 - 19.00 Uhr

Postgirokonto Berlin-West 3024-107

Bank für Gemeinwirtschaft
BLZ 100 101 11, Kto.-Nr. 100-4556 300

His Excellency
The President
J.R. Jayewardene

Colombo
Sri Lanka

Berlin, 15th 1987

Concerns: Miss Pulsara Liyanage

Your Excellency,

We learn, that Miss Pulsara Liyanage Asst. Lecturer Vidyalankara Campus had been arrested under the P.T.A. and detained from 1.11. 1986 without adducing any charges.

Miss Liyanage is an activist of the Movement for Inter-Racial Justice and Equality (MIRJE) and of the women's movement "Women for Peace", which had held street demonstrations in Colombo demanding a negotiated settlement of the ethnic problem. We guess, that these legal activities are the reason for her arrest.

The International League for Human Rights, Berlin, expresses strong protest against the arrest and demands the immediate release of Miss Pulsara Liyanage. We note with concern the deteriorating condition of human rights in Sri Lanka. Not only Tamil people are subjected to state violence but Sinhalese intellectuals like Miss Pulsara Liyanage, who demand a peaceful solution of the ethnic problem.

Yours sincerely

Internationale Liga für Menschenrechte e.V., Berlin

Alisa Fuss

Alisa Fuss



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மலையக தொழிலாளர்கள் போராட்டம்

மலையகத்தின் தலவாக்கொல்லைப் பகுதியில் தேயிலை ஆராச்சி நிலயத்திற்குச் சொந்தமான சென் கோம்ஸ் தோட்டத்தின் யு.என்.பி யூனியன் தலைவரான பிச்சைமுத்து யேசையா 27.12.86 அன்று விசாரணைக்காக பொலிஸ் நிலயத்திற்கு அழைத்துச் சென்றதன் பின்பு காணமற் போய் விட்டதைத் தொடர்ந்து 30.12.1986 அன்று சென்.கோம்ஸ் தோட்டத்தைச் சேர்ந்த 1500 தொழிலாளர்கள், பிச்சைமுத்து யேசையாவுக்கு என்ன நேர்ந்தது என விளக்கம் கோரி வேலைநிறுத்தத்தில் குதித்தனர்.

5.01.1987 அன்று சென்.கோம்ஸ்க்கு அருகில் உள்ள இரண்டு தோட்டங்களில் உள்ள தொழிலாளர்கள் அனுதாப வேலை நிறுத்தம் ஒன்றை ஆரம்பித்ததுடன் தேயிலை ஆராச்சி நிலயத்திற்கு முன்நிலையில் பெரியதொரு ஆர்ப்பாட்டத்தையும் செய்தனர்

இந்த இடத்திற்கு வந்த பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் மூன்று பேர் ஸ்தலத்திலேயே இறந்தனர், 8 பேர் காயத்துக்குள்ளாயினர். இதைத் தொடர்ந்து தலவாக்கொல்லைப் பகுதியில் ஏற்பட்ட தொழிலாள எழுர்ச்சியை ஒடுக்க தலவாக்கொல்லை நகரத்திற்கு பொலிசாரும் ராணுவத்தினரும் அழைக்கப் பட்டனர்.

இதைத் தொடர்ந்து அந்தப் பகுதியிலுள்ள பத்துத் தோட்டங்களில் உள்ள 20,000 தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்யத் தயாராகினர். இதைக் கண்டு பின்வாங்கிய தோட்ட மற்றும் பொலிஸ் அதிகாரிகள் தொழிற்சங்கத் தலைமைகளையும் பிரதம மந்திரி, ஜனாதிபதி ஆகியரைச் சந்தித்து நிலமையைச் சமானிக்க முயற்சி செய்தனர்.

இது சம்பந்தமாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் செயலாளர் செல்லச்சாமி பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள செய்தியில் சம்பந்தப்பட்ட தோட்டஅதிகாரி தலவாக்கொல்லைப் பகுதியில் இருந்து அகற்றப்பட்டால் வேலைநிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரமுடியும் என அறிவித்திருந்தார். (ரி.என்)

www.tamilarangam.net



# தென்னிலங்கையில் தொழிலாளர்கள் போராட தயாராகின்றனர்.

வடக்கிலும் கிழக்கிலும் நடக்கும் போராட்டத்தைச் சாக்காக வைத்து சாதாரண மக்கள் மீது வறுமைப் பளுவைச் சுமத்துகின்ற சிறி லங்கா அரசாங்கத்திற்கு எதிராகப் போராட தென் இலங்கைத் தொழிலாளர்கள் தயாராகிக் கொண்டிருக்கின்றார்கள். அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் விடம் போல் ஏறியிருக்கும் இவ்வேளையில் வாழ்க்கைச்செலவுப் புள்ளி 613.9 (1952=100) ஆக உயர்ந்துள்ளது. ஜனத்தொகையின் 60வீதத்திற்கும் அதிகமானோர் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள்.

இந்த நிலமையில் 21 தொழிற்சங்கங்களின் முன்னணியானது

1. 50 வீதமான மாதச்சம்பள உயர்வு,
2. ஆகக் குறைந்த மாதச் சம்பளம் ரூபா 1000,
3. ஒவ்வொரு வாழ்க்கைச்செலவுப் புள்ளி உயர்வுக்கும் ரூபா5, சம்பளவு உயர்வு,
4. 1980 ஜூலை வேலைநிறுத்தத்தில் வேலையிழந்தோருக்கு மீண்டும் வேலைகொடுக்கப்பட வேண்டும்,


என்ற கோரிக்கைகளை முன்வைத்து போராட்டத்தை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளது. (கே.பி).



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழ் பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமைகள் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.



## சி.எம்.யு 'பேராளர் மாநாட்டில் தீர்மானம்.

இலங்கையில் வடக்கு கிழக்குப் பகுதிகளில் வாழும் தமிழ் பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்படுதல் வேண்டும் என 95 வீதமான சிங்கள அங்கத்தவர்களைக்கொண்ட இலங்கை வர்த்தக கைத்தொழில் மற்றும் பொதுத் தொழிலாளர் சங்கம் (சி. எம். யு) 19.10.1986 இல் நடைபெற்ற 17வது பேராளர் மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் இன்று நடைபெறுவது 'இரு இனங்

www.tamilarangam.net

-களுக்கிடையிலான மோதல்' அல்ல, அது அந்த மாகாணங்களில் பெரும்பான்மையாக வாழும் தமிழ் பேசும் மக்கள் தமக்கென சுதந்திரமான ஒரு நிர்வாகத்தை அமைப்பதற்காக நடத்தும் அரசியல்ப் போராட்டத்தை ஒடுக்குவதற்காக அனுப்பப்பட்ட அரச படைகளுக்கும் தமது குறிக்கோள்களுக்காக ஆயுதப்போராட்டத்தை முன்னெடுக்கும் போராளிகளுக்குமிடையிலான மோதல்களாகும்.

1947 -ம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக ஆட்சிசெய்த அரசாங்கங்கள் கடைப்பிடித்த பாரபட்சமான கொள்கைகளும், 1958இல் இருந்து காலத்திற்குக் காலம் நடைபெற்ற இனஒழிப்பு வெறியாட்டங்களும், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் போலிசும் ராணுவமும் நடத்திய வெறியாட்டங்களும் உருவாக்கியதே இன்றைய தமிழீழத்திற்கான கோரிக்கையும் அதற்கான போராட்டமுமாகும்.

தாம் பாரம்பரியமாக வாழ்ந்துவந்த பிரதேசங்களில் தமக்கென சுதந்திரமான ஒரு நிர்வாகத்தை அமைக்கும் சுயநிர்ணயஉரிமை தமிழ் மக்களுக்கு உண்டு. இந்த உரிமையை அங்கீகரித்து ஒரு அரசியல் தீர்வு ஒன்றைக்காண இந்த அரசாங்கம் முன்வரவேண்டும்.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் அரசாங்கம் முன்னெடுக்கும் போர் கொள்கைகளுக்கு எதிராக உழைக்கும் மக்களை அணிதிரட்ட வேண்டுமெனவும் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (பரா)

---

SINTHANAI

Estd: 1985. 1/87

All comunications shall be addressed to :

Editors,
SINTHANAI
Olga str 49,
7-Stuttgart 1.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஏகபோக முதலாளித்துவம்.

முதலாளித்துவப் பொருளாதார அமைப்பு முறையின் வளர்ச்சிக் காலத்தை மூன்று பகுதிகளாகப்பிரிக்கலாம். விற்பனைக்கான உற்பத் தியை அடிப்படையாகக் கொண்ட ஆரம்ப காலம் 16ஆம் நூற்- ஆண்டிலிருந்து 1780 வரை நீடித்தது. 1780களில் ஏற்பட்ட தொழில் புரட்சியுடன் சுதந்திரமான போட்டியின் அடிப்படையில் அமைந்த முதலாளித்துவ சகாப்தம் ஆரம்பமாகியது. இதைத்தொடர் தது–ஏற்பட்–மூலதனக்–குவிப்பு–மற்றும்–மையப்படுத்தலின்–விளைவாக –ந்து 1880 களில் ஏகாதிபத்திய சகாப்தம் ஆரம்பமாகி இன்று வரை நீடித்துள்ளது.

## சுதந்திரமான போட்டி.

சுதந்திரமான போட்டியின் அடிப்படையில் அமைந்த முதலாளித்துவப் பொருளாதார முறையில் பல சிறு ஸ்தாபனங்கள் தம்மிடையே போட்டிபோட்டு பொருட்களை உற்பத்திசெய்து விற்பனைக்குக் கொண்டுவந்தன. எந்த ஒரு தனி ஸ்தாபனமும் சந்தையில் ஆதிக்கம் செலுத்தவில்லை. ஒவ்வொரு ஸ்தாபனமும் உற்பத்திசெய்யும் பொரு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ளின் விலையைக் குறைப்பதன் மூலமே அதிகமான பொருட்களை விற்பனை செய்யமுயன்றது. உற்பத்தித்திறனின் வளர்ச்சியின் பய ஆக முதலாளிகள் தமது இலாபத்திற்குப் பங்கம் வராத முறை யில் பொருட்களின் விலைகளைக் குறைத்து சந்தையில் போட்டி யிட முடிந்தது. இந்த உற்பத்தி வளர்ச்சிக்கு அவசியமான மூல தனம் தொழிலாளர்களிடமிருந்து சுரண்டப்பட்ட உபரி உழைப் பிலிருந்தே குவிக்கப்பட்டது.

முதலாளித்துவப் பொருளாதாரத்தில் இவ்வாறான குவிப்பு முறையானது உற்பத்தி முறையை நவீனப்படுத்தி சிறு ஸ்தாபன ங்களின் மூலதனங்களை சில பெரிய ஸ்தாபனங்களின் கைகளுக்கு மாற்றி மூலதனத்தை மையப்படுத்த உதவியது. குறைந்த தொ- கையான ஸ்தாபனங்களின் கைகளிற்கு 60-80 வீதமான உற் பத்தி கைமாறியபின் சந்தைகளில் முன்போல போட்டி நடை பெற முடியவில்லை. பெரிய கம்பனிகள் சந்தைவியாபாரத் தைத் தம்மிடையே பிரித்துக்கொண்டு பொருட்களின் விலை கள் வீழ்ச்சியடைவதைத் தடைசெய்தன. அக்காலத்தில் ஏற் பட்ட இயந்திர நவீனமயப்படுத்தல்கள் சுதந்திரமான போட் டியை மேலும் மட்டுப்படுத்தின. உற்பத்திக்கும் போக்குவரத் திற்கும் அவசியமான ஊசக்தியாக விளங்கிய நீராவிக்குப் பதிலாக மின்சார மோட்டார்களும் எண்ணெய் இயந்திரங்க ளும் பிரதியீடு செய்யப்பட்டதே இந்த இயந்திர நவீனமயப் படுத்தலாகும்.

இதன் பலனாக புதிய தொழில்கள் தோன்றின. மின்சார உற்பத்தி, மின்சார உபகரணங்கள், எண்ணெய் உற்பத்தி,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மோட்டார் வண்டிகள், இரசாயனத் தொழிற்சாலைகள் ஆகியவை உருவாகின. இவ்வகையான தொழில்களுக்கு, முன்னைய தொழில்களுக்குத் தேவைப்பட்டதைக் காட்டிலும் அதிகமான மூலதனம் தேவைப்பட்டது. இதனால் மூலதனக் குவிப்பும் மையப்படுத்தலும் மேலும் தீவிரமாக்கப்பட்டதுடன் பல ஸ்தாபனங்களுக்கிடையான போட்டியும் குறைந்தது. பெரும் முதலாளித்துவ ஸ்தாபனங்கள் போட்டியைத் தவிர்த்துக் கொள்ள "காட்டல்கள்", "சிண்டிக்கேட்"டுக்கள் என இணைந்து ஒப்பந்தங்கள் செய்து கொண்டன. பல கம்பனிகள் "டிரஸ்ட்"டுகளாக இணைந்து ஒரு இயக்குனர் குழுவின் கீழ் செயற்பட்டன. வெளிப்புறத்திற்கு சுதந்திரமான கம்பனிகளாக தோற்றமளித்த பல கம்பனிகள் பங்குமூலதனக் கொள்வனவுகள் மூலம் ஒருசில முதலாளிகளின் கட்டுப்பாட்டில் இயங்கின.

## வங்கி மூலதனம்

போக்குவரத்து, மற்றும் தொழில் ஸ்தாபனங்களில் ஏற்பட்ட மையப்படுத்தலும் குவிப்பும் வங்கித்தொழிலும் ஏற்பட்டது. தொழில் ஸ்தாபனங்களுக்கு கடன் கொடுப்பதே வங்கிகளின் முக்கிய செயற்பாடாகும். வங்கித் தொழில் மையப்படுத்தப்பட்டபின் உற்பத்தி ஸ்தாபனங்களுக்கு கடன் கொடுக்கும் உரிமையும் ஒரு சில வங்கிகளின் ஏகபோகமாகிவிட்டது. இவை வெறுமனே கடன்களைக் கொடுப்பதையும் பின் வட்டியையும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முதலையும் மீளப்பெறுவதையும் மட்டும் செய்வதில்லை. கம்பனி களுக்கிடையான தேவையற்ற போட்டியில் இலாபம் குறைவதை அவை விரும்புவதில்லை. இதனால் கம்பனிகள் இணைவதையும், தொழில்கள் மையப்படுத்தப்படுவதையும், மூலதனம் குவிவதை-யும் ஊக்குவிக்கின்றனர். அது மட்டுமல்லாது கம்பனிகளில் நேர-டியாகவும் முதலீடு செய்யப்படுகிறது. இவ்வாறு வங்கி மூல தனம் தொழில்துறையில் ஊடுருவி தனது ஆதிக்கத்தை நிலைநாட் டியுள்ளது.

முதலாளித்துவ சமுதாயத் அமைப்பின் கூர்முகத்தின் உச்சி யில் ஏகபோக வங்கிகளின் முதலாளிகளும், காப்புறுதி ஸ்தா பனங்களின் அதிபர்களும் ஏகபோக உற்பத்தி மற்றும் விற்பனை ஸ்தாபனங்களின் சொந்தக்காரர்களும் இருக்கின்றார்கள்.

ஏகாதிபத்திய நாடான அமெரிக்காவில் 60 குடும்பங்க ளும், பிரான்சில் 200 தனவந்தர்களும் அந்த நாடுகளின் பொரு ளாதாரத்தை தமது கைகளில் வைத்திருக்கின்றார்கள்.

ஏகபோக ஸ்தாபனங்களின் தோற்றமானது முதலாளித் துவப் போட்டியை முற்றாக ஒழித்து விடவில்லை. பொருட்க ளின் விலைகளைக் குறைத்துப் போட்டியில் ஈடுபடுவதையே ஏகபோகக் கம்பனிகள் தவிர்த்தன. இதனால் பெரும் "டிரஸ்டுகள்" அதிகமான இலாபத்தைப் பெறுகின்றன. விளம் பரங்களின் மூலமாகவும், உற்பத்திச் செலவு குறைப்பின் மூலமும் ஏகபோகக் கம்பனிகளுக்கிடையில் போட்டிகள் தொட



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ருகின்றன. ஏகபோகக் கம்பனிகள் கலைபிடாத துறைகளில் பழைய போட்டிகள் தொடருகின்றன. உலகச் சந்தையில் ஏக போகக் கம்பனிகளுக்கிடையில் வழமையான போட்டிகள் தொட ருகின்றன. மூலதனக் குவிப்பானது உலகச் சந்தையிலும் சர்வதே சக் "காட்டல்"களைத் தோற்றுவித்தது. இவை உலகச் சந்தை யையும் தம்முள் பங்கு போட்டுக் கொண்டன.

## மூலதன ஏற்றுமதி

ஏகபோகக் கம்பனிகள் உற்பத்தியை வரையறை செய் வதன் மூலமே சந்தைகளைக் கட்டுப்படுத்தி இலாபங்களை பெருக்க முடிந்தது. வரையறுக்கப்பட்ட உற்பத்தியுடன் மீத மாகும் மூலதனம் மேலும் மேலும் குவியலாயிற்று. இவ்வாறு குவிந்த மூலதனத்தை முதலீடு செய்வதற்கு வேறு நாடுகளை ஏகபோகக் கம்பனிகள் தேடலாயின. இந்த மூலதன ஏற்றுமதியே ஏகாதிபத்திய சகாப்தத்தின் முக்கிய தன்மையாகும்.

முதலாளித்துவ நாடுகளில் போட்டிகளின் மத்தியில் பெறப்படும் சராசரி இலாபத்தைக்காட்டிலும் அதிகஇலாபம் பெறக்கூடிய நாடு களுக்கு மூலதனம் ஏற்றுமதி செய்யப்பட்டது. இந்த ஏற்றுமதியானது ஏகாதிபத்தியநாடுகளின் முதலாளிவர்க்கத்தின் தேவைகளுக்கமையவே செய்யப்பட்டது. அபிவிருத்தியடையாத ஆசிய, ஆபிரிக்க மற்றும் தென்அமரிக்க நாடுகளில் மூலப்பொருட்களை உற்பத்திசெய்யவும், பெருந்தோட்ட விவசாயத்தை உருவாக்கவுமே இந்த முதலீடுகள் பாவிக்கப்பட்டன. இவ்வாறான முதலீடுகளின் இலாபங்களை பல வருட -ங்களின் பின்பு பெறக்கூடியதாக இருந்ததால் இவ்வாறு முதலீடு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

செய்தநாடுகளில் தமது நிரந்தரமான ஆளுமையை ஏற்படுத்த ஏகா -திபத்திய நாடுகள் முயற்சி எடுத்தன, முதைன ஏற்றுமதியின் தொட ர்ச்சியாக மற்றைய நாடுகளை ஆக்கிரமித்து ஆட்சிகளைக் கைப்ப பற்றி தமது காலனித்துவம் ராஜியங்களாகவும், செல்வாக்குட்பட்ட பிரதேசங்களாகவும் மாற்றிக்கொண்டன.

ஏகாதிபத்திய சகாப்தத்தில் ஏகாதிபத்தியநாடுகள் உலகத்தை தமக்குள் பங்கு போட்டுக்கொண்டன. முதலாளிவர்க்கத்தின் லாபங் களைப் பாதுகாப்பதற்கும், உலகவளங்களைக் கொள்ளை அடிப்ப தற்கும் தமது முதலீடுகளை ஸ்திரப்படுத்தவும், சந்தைகளைத் தம் வசப்படுத்தவும் பலகோடிக்கணக்கான மக்களின் உயிர்களைக்குடித்து ஆக்கிரமிப்பு யுத்தங்களையும் , உலகப்போர்களையும் நடாத்தி முடித்தன. இந்தப்போர்கள் உயர்ந்த லட்சியத்திற்காகவோ, ஜனநாயகத்திற்காகவோ நடத்தப்பட்டவை என்பது தவறாகும். ஏகாதிபத்திய நாடுகளின் சுரண்டல்களுக்காகவே இந்தப்போர்கள் நடத்தப்பட்டன.

ஏகாதிபத்திய நாடுகளிலுள்ள சில ஏகபோக முதலாளிகளின் நலன்களுக்காக உலகத்தின் கோடிக்கணக்கான மக்களும் அவர்களுக் குரித்தான மூலவளங்களும் சுரண்டப்பட்டன. மனிதஇனத்தில் 2/3 பங்கு அபிவிருத்தியடையாத பின்தங்கிய நிலைக்குள்ளாகியது. காலனித்துவ நாடுகளில் சுரண்டப்பட்ட இலாபங்கள் ஏகாதிபத்திய நாடுகளை நவீனமுறையில் அபிவிருத்தி செய்யப்பயாவிக்கப்பட்டன. வறிய நாடு களின் அதிக உழைப்பினை உற்பத்தி செய்யப்பட்ட மூலப்பொருட்களு க்குப் பதிலாக அபிவிருத்தியடைந்த நாடுகளின் குறைந்த உழைப்பினை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உருவாகிய விற்பனைப் பொருட்கள் கைமாறின. வறிய நாடுகளில் சுரண்டப்பட்ட இலாபங்கள் அந்த நாடுகளை அபிவிருத்தி செய்யப் பாவிக்கப்படவில்லை. உலகில் வறுமையில் வாடும் 2/3 பங்கு மனித குலத்திலிருந்து உறிஞ்சிய இரத்தமே ஏகாதிபத்திய நாடுகளின் சுகபோகங்களுக்கு உதவியது ■



www.tamilarangam.net

# நாளைய நாளும் நேற்றைய நேற்றும்

முன்னே —
முகிழ்க்கின்ற பனிப் போர்வையிலும்
தோளின் சால்வை தூக்குதலை
இன்னும் நாங்கள் பேணவில்லை.

'அவர்கள்' தாமே மனிதரென்றார்
'நாமும் நாமும்' என்றார்த்தோம்.
சுவர்கள் —
சுற்றி எழுந்திருந்தன.
தகர்த் தெறிந்தோம்.

சுவர்கள் தகர்க்கப் படும் போதில்
கற்களெம் மீதில் விழுந்தனதாம்.
ஓய்வுக்குள்
தலைபுதைக்க மறுத்துவிட்டு
தொடர்ந்து தகர்த்தோம்; தகர்த்தோம்.

எமக் கென நிலவுபால் வீசும்
எத்தனை பொழுதுகள் செத்திருக்கும்......!
நினைக்க வியர்க்கும் — எனினும்
முனைப்பு முடிவிடத்தில்
சுவர்கள் வீழ்ந்தன.

வெற்றி எனச்சிறு
நினைப்பில் ஊறினோம்.
கால்கள் —
அத்திபாரக் கல்லில் தடுக்குது.
தோள்கள் மலையெனத்
தொடுத்து வைத்திருக்கிறோம்.
நாளைய நிகழ்விற்காய் !

இளவாலை விஜயேந்திரன்

www.tamilarangam.net

# சர்வதேச பெண்கள் தினம்

# மார்ச் 8



அடுத்த இதழ் விசேட பெண்கள் இதழாக
வெளிவரவிருக்கிறது!
வாசகர்களிடம் இருந்து ஆக்கங்கள்
எதிர்பார்க்கப்படுகிறது!

ஆசி.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தென் ஆசிய நிறுவனம்

Südasien Büro Info in Tamil
(2 x im Monat, Jahresbezug: 35,--)

மேற்கு ஜேர்மனி

## தமிழ்ச் செய்திக் குறிப்பு

எமது நிறுவனத்திலிருந்து மாதம் இரு
முறை தமிழிலும் செய்திக்குறிப்புகள்
வெளிவருகின்றன. பெற விரும்பு-
வோர் தொடர்பு கொள்ளவும்.
கட்டணம் ! 1 வருடத்திற்கு 35 D.M
6 மாதத்திற்கு 18 D.M

**SÜD-ASIEN-INFO**

Südasien-Büro e.V., Kiefern-
str. 45, 56 Wuppertal 2, Tel.:
o2o2-5o7156, Bürozeiten: Mo.-Fr. 9-17 Uhr



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உங்களுடன் சில வார்த்தைகள்..........

சிந்தனை இதழ்களை ஒழுங்காக வெளிக் கொண்டு வருவதற்கு இடையூறாக இருப்பது சாதாரணமாக இத்தகைய பத்திரிகைகளுக்கு ஏற்படும் நிதிநெருக்கடியே -யாகும். தாங்கள் பெறும் இதழுக்குரிய *பணத்தைச் செலுத்துவதன் மூலமும், ஆறு இதழ்களுக்கான வருட சந்தா 20 டி.எம். எமக்கு அனுப்புவதன் மூலமும் நீங்கள் இந்த நிதி நெருக்கடியைப் போக்கி சிந்தனை யை ஒழுங்காக வெளிவர உதவி செய்யலாம்.

இலங்கையிலும் இந்தியாவிலும் உள்ள தோழர்களுக்கு எமது பத்திரிகைகளை இலவசமாகவே அனுப்புகின்றோம். எமது பத்திரிகையைப் பெற விரும்பும் மற்றைய தோழர்களின் முகவரிகளை எமக்கு அறிவிப்பதன் மூலமும், தங்களிடமுள்ள பத்திரிகைகளையும், பத்திரிகை நறுக்குகளையும் எமக்கு அனுப்புவதன்மூலமும் நீங்கள் எமக்கு உதவலாம்.

மேற்கு ஐரோப்பிய நாடுகளில் உள்ள தோழர்கள் நிதி மற்றும் வருடசந்தா( 20 டி.எம்) அனுப்ப வேண்டிய

முகவரி--

P.Kumarasamy,
c/o. SINTHANAI,
Olga str 49,
7- Stuttgart 1.

* குறிப்பு: தனிப் பிரதிக்கான அன்பளிப்பு 3.50 டி.எம் ஐ தபால் முத்திரைகள் மூலமாகவும் அனுப்பலாம்.

ஆசிரியர் குழு.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நாம் பேசவேண்டும்! எழுதவேண்டும்!! வாழ வேண்டும்!!

சிறிலங்காப் பேரினவாத அரசால் மறுக்கப்பட்ட உரிமைகளைப் பலவந்தமாகப் போராடிப் பெற முற்பட்ட வரலாற்றின் பிரசவமே எமது தேச விடுதலைப் போராட்டம். இந்த உலகின் எந்தவொரு சின்ன சிறு உயிரினமும் தான் வாழும் சூழலோடு போராடித்தான் உயிர்வாழ்கின்றது. உயிர் வாழ வேண்டுமென்றால் போராடியாக வேண்டும். இது பொது நியதி. உயிர் வாழ்க்கைக்கு உத்தரவாதமற்ற நிலைமை உருவாகிய போது அந்த எதிரிகளுக்கெதிராக மக்கள் விரோத சக்திகளுக்கெதிராக நாம் போராடி வந்தோம். தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் யாழ். பல்கலைக்கழகம் தன்னாலான பணிகளை செய்துவந்துள்ளது.

எந்த மக்களின் உரிமைகளுக்காகவும், எந்த மக்களின் சுதந்திர வாழ்வுக்காகவும் நாம் மாணவர்கள் என்ற எல்லைக்குள் நின்று போராடி வந்தோமோ அந்த உரிமைகளும் அந்த சுதந்திரமும் இன்று கேள்விக்குறியாக மாற்றப்படுகின்றன. மாணவர் விஜிதரன் விடுவிக்கக் கோருவதன், அதற்காகப் போராடுவதன் நோக்கம் விஜிதரன் என்கின்ற ஒரு தனி மனிதனைப் பாதுகாப்பதல்ல. விஜிதரன் ஒரு தனி மனிதன் தன் வயிற்றுப்பசிக்கு உணவும் தன் அன்றாட சுய தேவைகளோடும் வாழ்ந்த ஒரு சாதாரண மனிதன் என்றால் அவர் கடத்தப்பட்டிருக்க மாட்டான். ஜனநாயகத்தின் பேரில் அவன் கொண்டிருந்த கருத்துக்கள், மாணவர்களின் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாக்கும் போராட்டத்தில் அவன் ஆற்றிய பங்கு... ......... ...... போன்ற விடயங்கள் இவனது கடத்தலுக்கு பின்னணியில் இருக்கின்றன. இங்கே தான் விஜிதரன், ஒரு வெறும் தனி மனிதனாக அல்லாது ஒரு அரசியல் நிலைப்பாட்டைக் கொண்டு அதற்காக செயற்பட்ட, போராடிய மனிதனாகின்றான். இதனாலேயே அவர் கடத்தப்பட்டுள்ளார்.

## இது சரியானதா? இது நியாயமானதா? இது அனுமதிக்கக் கூடியதா?

வாய் சாப்பிடுவதற்காக மட்டும் இருப்பதாக சிலர் சொல்லுகிறார்கள். வாய் பேசுவதற்காகவும் இருக்கிறது. இந்த இயற்கை நியதியின் பிரதிபலிப்பாகவே அதனால் உருவாகும் கருத்தை ஒவ்வொரு மனிதனும் தன் வாயால் வெளிப்படுத்துகின்றான். அப்படிச் செய்யாதே "பேசாமல் சாப்பிட்டுக் கொண்டு மட்டுமிரு இல்லது வெளிநாட்டுக்குப் போ" என்று சொல்வது ஜனநாயக விரோதமானது மட்டுமல்ல இயற்கைக்கே விரோதமானது.

விஜிதரன் கடத்தப்பட்டமையை அனுமதிப்பது மாணவர்களாகிய நாம் வெறும் சதைப்பிண்டங்களாகச் சாப்பாட்டு ராமன்களாக இருந்தால் மட்டுமே சாத்தியமாகும். அன்பார்ந்த மக்களே! விடுதலை ஸ்தாபனங்களே! விஜிதரனைக் கடத்திய வீரர்களே! பல்கலைக்கழக மாணவர்களாகிய நாம் சாப்பாட்டு ராமன்கள் அல்ல என்பதை மிகத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

எமது போராட்டம் சர்வதேச பிற்போக்கு சக்திகளினால் மழுங்கடிக்கப்படக் கூடிய அபாயத்தை எதிர்நோக்கி இருக்கும் இவ்வேளையில் எமது போராட்டத்தைப் பாதுகாக்க வேண்டிய கடமைப்பாட்டை மாணவர்களாகிய நாம் என்றும் மறந்து போனதில்லை. நாம் போராடுவது நமக்கொரு தேசமும், அதற்கான விடுதலையும் அவசியப்படுவது எமது மக்களின் அதன் மேல் வேறு பிரச்சினையில் ஜனநாயக உரிமைகளும், அவர்கள் உயிர்வாழ்வதற்கு வேண்டிய அடிப்படை மனித உரிமைகளும் பாதுகாக்கப்பட வேண்டும். தமது சொந்த தாயகத்தில் சுதந்திர புருஷர்களாக தன்மானமிக்க மனிதர்களாக நாம் வாழ வேண்டும் என்பதற்காகவே.

இத்தகைய சுதந்திர வாழ்க்கைக்கு அச்சுறுத்தல் தோன்றும் போது அதற்கெதிராக போராட வேண்டியது எமது பிரதான கடமையாகின்றது. அதையே செய்து கொண்டிருக்கின்றோம். இப்போதெல்லாம் அரசியல் காரணங்களுக்காக மாணவர்கள் தாக்கப்படுகின்றார்கள்.

விஜிதரன் விவகாரம் இவ்வளவு தூரம் காணாமல் போன விஜிதரன் கண்டுபிடிக்க தேடுதல் வேட்டை நடத்தியவர்களிடமிருந்து தகவல்கள் ஏதுமில்லை. அதனால் சக மாணவர்கள் நாம் சாகப்போகின்றோம் ........ ............ எமது அடிப்படை ஜனநாயக உரிமைகளுக்காக சின்ன பிரச்சினையை பெரிது படுத்துவதாக சில குரல்கள் முணுமுணுப்பதும் நமக்குக் கேட்டுத்தானிருக்கிறது. எமக்கு தெரியும் அடிப்படை ஜனநாயக உரிமைகளை குழி தோண்டிப் புதைப்பது அராஜக வாதிகளுக்கு எப்போதுமே சின்ன விசயம்தான்.

யாழ் பல்கலைக்கழகம் ஒரு உயரிய கல்வி நிறுவனம். பெருந்தொகையான மாணவர்களை ஒரு அமைப்புக்குள் கொண்டுள்ள ஸ்தாபனம். தனக்குக் கீழ் ஆயிரக்கணக்கான பாடசாலைகளை அதன் மாணவர்களை அணி திரட்டக் கூடிய ஸ்தாபனம். கடந்தகாலப் போராட்டங்கள் மூலம் அதை நிரூபித்த ஸ்தாபனம்.

இதன் பல்கலைக்கழகத்தினுள்ளே விஜிதரனுக்கு இந்த நிலைமையென்றால் அப்பாவி பொது ஜனங்களுக்கு என்ன கதி! ஸ்ரீலங்காப் பேரினவாத அரசின் தமிழ் பேசும் மக்கள் மீதான ஒடுக்குமுறைக்கெதிராக போராடும் பல்கலைக்கழக மாணவர்களாகிய நாம் எமது மக்கள் மீது மேற்கொள்ளப்படும் சகல அராஜக வன்முறைகளுக்கெதிராகவும் போராடியே தீருவோம்.

**எமக்கு விஜிதரன் வேண்டும்!**

**எமக்கு ஜனநாயகம் வேண்டும்!**

**நாம் பேசவேண்டும்! எழுத வேண்டும்! வாழ வேண்டும்!**

**எல்லாவற்றுக்குமாக நாம் போராடித்தான் ஆக வேண்டும்.**

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்